DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw6<br>Defence<br>Court |
| Name | : | திரு.சங்கர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of June 2023.

(A1 to A3, A5 present. A4 absent. 317 Cr.p.c. Petiiton filed and allowed)

**முதல் விசாரணை**

நான் காசிமேஜர்புரம் செண்பக விநாயகர் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகன்களுக்கு பைனான்ஸ் செய்து வருகிறேன். சங்கரன்கோவில் அருகில் வசிக்கும் வெள்ளத்துரைச்சி என்பவரின் பைனான்ஸ்ஸில் என்னிடம் ரூ.80,000/-க்கு மாருதி சுசுகி ஈகோ வாகனத்திற்காக வாங்கியிருந்தார். அவ்வாறு வாங்கியதில் இருந்து அவர் தவணைகளை செலுத்தவில்லை. இத்தவணைகளை செலுத்தாததால் நான்

வெள்ளத்துரைச்சியை போனில் தொடர்பு கொண்டேன். அவர் போன் எடுக்காமலும் பேசாமலும் இருந்தார். பின்பு வேறு வேறு போன் மூலமாக பேசிய போது அவர் பேசினார். அவரிடத்தில் வண்டி இல்லை என்றும் முடிந்தால் எடுத்துக்கொள்ளுமாறும் தவறாக பேசினார். அது தான் வாகனத்தை பரிமுதல் செய்வதற்கு நான் நடவடிக்கை எடுத்தேன். அச்சன்புதுர் காவல்நிலையத்திற்கு சென்று இந்த நடத்தைக்காக பைனான்ஸ் செய்யப்பட்டது சம்பந்தமான ஆவணங்களை காண்பித்து காவல் நிலையத்தில் வாக்குமூலம் கொடுத்தேன். காரின் உரிமையாளரிடமும் காவல் நிலையத்தில் இருந்து பேசி அச்சன்புதுர் ஐயூப் காம்போன்டில் இருந்து வெள்ளத்துரைச்சியின் காரை நான் பறிமுதல் செய்துவிட்டேன். 10 நாட்கள் கழித்து ராஜகோபால் என்பவர் கொலை செய்து விட்டார் என்றும் அதுசம்பந்தமாக விசாரிக்க வேண்டும் என்றும் அச்சன்புதுர் காவல்நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். பின் காவல் நிலையத்திற்கு சென்று பரிமுதல் செய்தது சம்பந்தமாக ஏற்கனவே அச்சன்புதுர் காவல் நிலையத்தில் தகவல் கொடுத்த விவரத்தை நான் தெரிவித்தேன். அவர்கள் காவல் நிலையத்தில் இருந்த ஆவணங்களை சரிபார்த்து ஒப்புக் கொண்டார்கள். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

காசிமேஜர்புரத்தில் நான் பைனான்ஸ் தொழில் நடத்தவில்லை. தென்காசி டிவிஎஸ் ஷோரூமில் இருந்து பைனான்ஸ் தொழில் நடத்தி வருகிறேன். பைனான்ஸ் தொழில்நடத்துவதற்கு அரசாங்கத்திடம் உரிமம் பெற்றிருந்தேன். யார் யாருக்கு எவ்வளவு ரூபாய் பைனான்ஸ் செய்கிறேன் என்பதற்கு ஆவணங்கள் உள்ளது. வெள்ளத்துரைச்சிக்கு எவ்வளவு ரூபாய்க்கு எந்த வாகனத்திற்காக பைனான்ஸ் செய்தேன் என்பதற்கு என் அலுவலகத்தில் ஆவணங்கள் உள்ளது. அந்த ஆவணங்களை நான் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் கொடுத்திருக்கிறேன். காவல் நிலையத்தில் நான் கொடுத்த ஆவணத்தில் வெள்ளத்துரைச்சி எத்தனை தவணைகளாக பணம் கொடுக்கவில்லை என்பது துலங்கும் என்றால் சரிதான். வெள்ளத்துரைச்சி முதலில் வாகனம் வாங்கும்போது பணம் கொடுத்துதான் அவர் வாங்கினார். அதனால் பதிவுச் சான்றிதழில் கடன் பற்றி விவரங்கள் துலங்காது என்றால் சரிதான். வெள்ளத்துரைச்சி பணம் தராமல் ஏமாற்றினார் என்பதற்கு காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. காவல்

நிலையத்தில் புகார் அளிக்காமல் சட்டப்படியாக வாகனத்தை பறிமுதல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றால் காவல் நிலையத்தில் தகவல் கூறிதான் பறிமுதல் நடவடிக்கை எடுத்தேன். பறிமுதல் நடவடிக்கை காவல் நிலைய ஆவணங்களில் துலங்கும். காவல் நிலையத்தில் தகவல் கொடுத்து வாகனத்தை பறிமுதல் செய்ய சென்ற போது போலீசார் உடன் வரவில்லை. சட்டவிரோதமாக நான் வாகனத்தை எடுத்துச் சென்றாதாக என்மீது அவர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அந்த வண்டியின் அசல் பதிவுச்சான்று மற்றும் சாவி என்னிடம் தான் இருந்தது. இந்த வழக்கு விஷயமாக ஆய்வாளர் என்னை விசாரித்த போது அந்த பதிவுச் சான்று மற்றும் சாவியை காவல் ஆய்வாளரிடம் நான் கொடுக்கவில்லை. முதல் விசாரணையில் கூறியவாறு பைனான்ஸ் தொழில் நடத்தி வருகிறேன் என்பதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து வாகனத்தை பறிமுதல் செய்தேன் என்று என்னால் கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. என்னை காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார். தேதி ஞாபகம் இல்லை. முதல் விசாரணையில் கூறிய விஷயங்கள் பொய் என்றும் வெள்ளத்துரைச்சி வாகனத்தை என்னிடம் பைனான்ஸ் மூலமாக வாங்கியதாக கூறுவதும் பொய் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்க இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.06.16 18:37:43 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw7 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு.முருகன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of June 2023.

(A1 to A3, A5 present. A4 absent. 317 Cr.p.c. Petiiton filed and allowed)

**முதல் விசாரணை**

நான் அச்சன்புதூரில் குடியிருந்து வருகிறேன். தென்காசி பால்கூட்டுறவு சங்கத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 9 நபர்கள். வழக்கில் இறந்து போன சண்டியர் என்ற இராஜகோபால் என்னுடன் உடன்பிறந்த தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளில் சாமித்துரையை தெரியும். என்னுடைய தம்பி விவசாயம் செய்து வந்தார். செங்கோட்டையில் கிழக்கு வட்டார காங்கிரஸ் கட்சி தலைவராக இருந்தார். வழக்கில் ஆஜரான சாமித்துரை தலைவன் கோட்டை ஊரை சேர்ந்தவர்.

சாமித்துரை எங்கள் ஊரைச் சேர்ந்த சுவாதி என்ற பெண்ணை 2வதாக திருமணம் செய்திருந்தார். மகேந்திரா லோகோ காரை சாமித்துரை பைனான்ஸில் வாங்கியிருந்தார். அதற்கான தவணைகளை அவர் செலுத்தவில்லை. அதனால் சாமித்துரை அவருடைய வண்டியை அச்சன்புதுரில் ஒளித்து வைத்திருந்தார். பைனான்ஸ் கட்டாததால் பைனான்ஸ்காரர்கள் வண்டியை பறிமுதல் செய்ய வண்டியை தேடிக்கொண்டிருந்தார்கள். என்னுடைய தம்பி ராஜகோபால் வண்டியை பைனான்ஸ்காரர்களிடம் காண்பித்து கொடுத்தாகவும் அதனால் சாமித்துரைக்க முன்விரோதம் இருந்ததாகவும் தெரியவந்தது. 12/08/2015 அன்று இரவு 9.00 மணியளவில் சாமித்துரையும் அவருடன் நாலு ஐந்து நபர்களும் அச்சன்புதுரில் வைத்து என் தம்பியை கடத்திக் கொண்டுவிட்டு சென்றார்கள். நான் என் தம்பி மனைவி லட்சுமி என் தம்பியின் மூத்த மகன் தங்கம் இளைய மகன் வெண்ணியப்பன் ஆகியோர்கள் அச்சன்புதுரில் காவல் நிலையத்திற்கு சென்று என் தம்பி மனைவி புகார் கொடுத்தார். அதன்பிறகு நாங்களும் உறவினர்களும் என் தம்பியை தேடினோம். காவல் துறையும் தேடியது. மறுநாள் காலை 9.00 மணிக்கு பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் போனில் என்னை அழைத்தார். தலை இல்லாத உடல் ஒன்று கிடக்கிறது என்று நான் அதை அடையாளம் காட்ட வேண்டும் என்றும் என்னை அழைத்தார். நானும் என் தம்பி ஜானகிராமன் மற்றம் உறவினர்கள் பாளையங்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்து காவல் ஆய்வாளர் எங்களை அழைத்துக் கொண்டு கீழநத்தம் ரோடு முறிக்குளம் என்கிற இடத்திற்கு அருகில் ஒரு இறந்த உடலை வைத்திருந்தார்கள். அதில் தலை இல்லாமல் இருந்ததது. எங்களை அடையாளம் காட்டச் சொன்னார்கள். உடல் பாதி எறிந்தும் பாதி எறியாத நிலையிலும் இருந்தது. இந்த சம்பவத்திற்கு 2 வருடங்களுக்கு முன்பாக என் தம்பி இராஜகோபாலுக்கு இதயத்தில் அறுவை சிகிச்சை நடந்தது. கழுத்திலிருந்து நெஞ்சு வரை அந்த தளும்பு இருந்தது. அந்த உடலிலும் அந்த தளும்பு இருந்தது. அன்றைய தினம் வெள்ளை வேஷ்டி மஞ்சள் கரையை உடைய அணிந்திருந்தார். ஊதாக்கலர் ஜட்டியும் வெள்ளை பணியனும், வெள்ளச் சட்டையும் அணிந்திருந்தார். 2 கால்களிலும் பெருவிரல் பெரிதாக இருக்கும். இந்த அடையாளங்களை வைத்து இறந்த உடலில் எனது தம்பி உடல் என்று அடையாளம் காட்டினோம். 12.30 மணியிலிருந்து 3.00 வரை என்னிடம் போலீசார் விசாரணை செய்தார்கள். பின்பு தலை இருக்கும் இடத்திற்கு

அழைத்து செல்வதாக கூறி கக்கன்நகர் பாலத்திலிருந்து 10 அடி தள்ளி வடக்கே ஒரு தலை கிடந்தது. அது எறிந்த நிலையில் இருந்தது. அது என்னுடைய தம்பியின் தலை என்று நான் தெரிந்து கொண்டேன். அங்கும் என்னுடைய தம்பியின் உறவினர்களுடன் சென்றேன். என் தம்பியில் தாடை பற்கள் போன்றவற்றை போலீசார் ஆய்வுக்கு எடுத்துச் சென்றார்கள். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னுடைய தம்பி ராஜகோபால் தங்கியிருந்த ஊருக்கும் என்னுடைய ஊருக்கும் இடையே சுமார் 1 கி.மீ. தூரம் உள்ளது. மேலாளராக 4 ஆண்டுகள் பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய தம்பியில் காங்கிரஸ் கட்சியில் இறப்பதற்கு எத்தனை நாட்கள் முன்பிலிருந்து தலைவராக இருந்தார் என்று எனக்கு தெரியாது. அவர் காங்கிரஸ்காரர் என்பவரால் கதர் வேஷ்டி கதர் சட்டை தான் அணிவார் என்றால் அவற்றையும் அணிவார் வேறு வேஷ்டி சட்டையும் அணிவார். அவரை சண்டியர் என்று அழைப்பார். சண்டிகேஷ்வரர் கோவில் பெயரை வைத்து தான் சண்டியர் என்று அழைப்பார். அவர் ஊரில் ரவடித்தனம் கட்டப்பஞ்சாயத்து செய்வதில்லை. அவரின் மனைவியான லட்சுமி ஊர் பஞ்சாயத்து உறுப்பினராக இருந்தார் என்றால் சரிதான். மகேந்திரா லோகா காரை பைனான்ஸில் வாங்கிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. 12/08/2015ம் தேதி இரவு 9.15 மணிக்கு என்னுடைய தம்பியை கடத்தி சென்றாக நான் தெரிந்து கொண்டேன். அச்சன்புதுரில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது நானும் உடனிருந்தேன். புகார் கொடுத்த உடனே போலீசார் தேடிச்சென்றனர். நான் அவர்களிடம் செல்லவில்லை. 13/08/2015 அன்று காலை 9.00 மணிக்கு அச்சன்புதுரில் காவல் ஆய்வாளர் என்னை நீங்கள் வாருங்கள் விவரம் கூறவேண்டும் என்று அழைத்தார். அச்சன்புதுரில் காவல் நிலையத்திற்கு நான் 10 நிமிடத்தில் சென்றுவிட்டேன். அச்சன்புதுரில் காவல் ஆய்வாளர் பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் என்னிடம் பேச வேண்டும் என்று கூறினார். அவர் தலையில்லா உடல் கிடப்பதாகவும் அதை பார்த்து உடனே அடையாளம் கூறுமாறும் சொன்னார். என்னுடன் ஜானகிராமன் என்கிற என்னுடைய தம்பி வந்தார் மற்றும் இரண்டு மூன்று நபர்கள் வந்தார்கள். நாங்கள் வாடகை காரில் சென்றோம். காரின் வண்டி எண் மற்றும் வாகனத்தை ஓட்டி வந்த டிரைவரின் பெயர் ஞாபகம் இல்லை. நாங்கள் நேரடியாக

பாளையங்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்து பிணம் கிடத்த இடத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். நாங்கள் எங்கள் காரில் சென்றோம். போலீசார் ஜீப்பில் வந்தார்கள். அதற்கு முன்பு அந்த ஏறியா வழியாக சென்றிருக்கிறேன். அங்கு சென்றதில்லை. பிணம் கிடந்த இடம் கீழநத்தம் ரோடு முறிக்குளம் அருகில் இருந்தது. நாங்கள் நான்கு வழிச்சாலையாக சென்றோமோ என்று ஞாபகம் இல்லை. இறந்த உடல் கீழநத்தம் ரோட்டிற்கு எந்த திசையில் கிடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. தண்ணீருக்குள் இருந்த உடலை வெளியே எடுத்து வைத்திருந்தார்கள். அது பாதி எறிந்தும் எறியாத நிலையில் இருந்தது. நான் பார்க்கும்போது உடலில் ஆடைகள் இருந்தது. அவரின் உடலின் தளும்பு இருக்கும் இடத்தில் தீபுண் இல்லை. மற்ற இடங்களில் தீப்புண் இருந்தது. பெருவிரல்கள் பெரியதாக இருக்கும். அதிலும் தீப்புண்கள் இருக்கவில்லை. மேலகூறிய இரண்டு அடையாளங்களை தவிர அவரது உடலில் வேறு அடையாளங்கள் நான் பார்க்கவில்லை. இருதய அறுவை சிகிச்சை செய்த தளும்பு அறுவை சிகிச்சை செய்த தளும்பு எல்லாருடைய உடம்பிலும் இருக்கும் என்றும் அதை வைத்து அது என்னுடைய தம்பியின் உடல் என்று அடையாளம் காணஇயலாது என்றால் சரியல்ல. கக்கன்நகர் பாலத்திற்கும் தலை கிடத்த இடத்திற்கும் இடையே சுமார் 10 அடி தூரம் இருக்கும். தலை கிடந்த இடத்தில் கருவேலன் செடிகள் இருந்ததா என்று எனக்கு ஞாபகம் இல்லை. காவல் ஆய்வாளரிடம் தலை எறிந்து இருந்ததா என்னுடைய தம்பியின் தலை என்று அடையாளம் காணமுடியவில்லை என்று கூறவில்லை. அடையாளம் காட்டிய பின்பு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அவ்வாறு விசாரணை செய்த போது நான் கூறிய விவரங்களை எழுதிக் கொண்டு என்னிடம் கையெழுத்து வாங்கினார். இறந்த உடலை பிரேத விசாரணை செய்த போது என்னை விசாரித்தார். மேலும் விசாரணை செய்த போது என்னுடைய தம்பி ஜானகிராமனை விசாரித்தார்கள். வேறு யாரையும் விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு விஷயமாக முதல் விசாரணை கூறிய விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. நான் என் தம்பி இறந்த உடலையும் எறிந்தும் எறியாத நிலையில் உள்ள தலையை அடையாளம் காட்டியதாக கூறியதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. அதனால் தான் காவல் ஆய்வாளரில் ராஜகோபாலின் தலையா என்று உறுதியாக தெரியவில்லை என்று கூறிய பின்பு நீதிமன்றத்தில் அவ்வாறு கூறவில்லை என்று

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தம்பி 2015 ல் இறந்திருக்கிறார். ஆய்வாளரும் போலீசாரும் என்னுடைய தம்பி இறந்த வழக்கில் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் வேண்டாத நபர்கள் என்பதால் அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.06.16 18:37:57 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

| | |
|---|---|
| Calendar | |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | **S.C.No.745/2017** |

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw8 |
| | | Defence |
| | | Court |
| Name | : | **திரு.தங்கம்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of June 2023.

(A1 to A3, A5 present. A4 absent. 317 Cr.p.c. Petiiton filed and allowed)

**முதல் விசாரணை**

நான் அச்சன்புதுரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ராஜகோபால் என்னுடைய அப்பா ஆவார். ஆஜர் எதிர்களை எனக்கு தெரியும். என்னுடைய அப்பா விவசாயம் செய்து வந்தார். செங்கோட்டை வட்டார காங்கிரஸ் கட்சி தலைவராகவும் என்னுடைய அப்பா இருந்தார். சாமித்துரை காரை பைனான்ஸில் வாங்கியிருந்தார். சாமித்துரை பைனான்ஸ் கட்டவில்லை. அதனால் பைனான்ஸ்கார்களிடம் சாமித்துரையின் வண்டியை

என்னுடைய அப்பா காட்டிக் கொடுத்தார். அதனால் பிரச்சனை ஏற்பட்டது. 12/05/2018 ம் தேதி அச்சன்புதுரில் பஸ்ஸாண்ட்டில் சற்று கிழக்கே இரவு 9.00 மணிக்கு சாமித்துரையும் அவருடன் சேர்ந்து 4 பேரும் என்னுடைய அப்பாவை கடத்தி சென்றுவிட்டார்கள். இது சம்பந்தமாக என்னுடைய அம்மாவும் சித்தப்பாவும் பெரியப்பாவும் அச்சன்புதுரில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். மறுநாள் காலையில் பாளையங்கோட்டை காவல் ஆய்வாளர் என் அம்மாவிடம் சடலம் கிடப்பதாகவும் அதை வந்து பார்க்குமாறும் அழைத்தார். நான் என்னுடைய பெரியப்பா சித்தப்பா மற்றும் வீட்டார்கள் பாளையங்கோட்டை கீழநத்தம் சிம்மராஜா பைபாஸில் கால்வாய் அருகே சடலம் கிடந்தது. தலை இல்லாமல் உடல் மட்டும் கிடந்தது. என்னுடைய அப்பாவிற்கு இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு கால்களில் உள்ள பெருவிரல்கள் பெரியதாக இருக்கும். இந்த இரண்டு அடையாளங்கள் வைத்தும் அவருடைய வேஷ்டி சட்டை பணியன் ஜட்டி ஆகியவற்றை வைத்து என்னுடைய அப்பாவின் உடல் என்று அடையாளம் காட்டினேன். அதன் பின்பு காவல் ஆய்வாளர் என்னை அழைத்து விசாரணை செய்தார். அங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில் தலை எறிந்த நிலையில் இருந்தது. பற்கள் தாடை எறிந்த நிலையில் இருந்தது. காவல் ஆய்வாளர் அவற்றை எடுத்து அவற்றை பிரேத பரிசோதணைக்கு எடுத்து சென்றார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னுடைய அப்பாவிற்கு விவசாயம் நிலங்கள் நிறைய உள்ளது. நானும் அவருக்கு உதவியாக விவசாயம் தான் செய்து வருகிறேன். என்னுடைய அம்மா வார்டு உறுப்பினர் என்பதால் பொது மக்கள் பிரச்சனைக்கு அடிக்கடி காவல் நிலையத்திற்கு செல்வது உண்டு. சாமித்துரையும் 4 நபர்களும் என்னுடைய அப்பாவை கடத்தி சென்றதை நான் நேரில் பார்த்தேன். காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றபோது நானும் உடன் சென்றிருந்தேன். காவல் நிலையத்தில் என்னுடைய அம்மா புகார் அளித்தார். அதில் நான் எந்த கையெழுத்தும் போடவில்லை. என்னுடைய அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது என்னை தயாரையும் தவிர பெரியப்பா சித்தப்பா எல்லோரும் வந்தார்கள். காவல் நிலையத்தில் புகார் அளித்த மறுநாள் உடலை அடையாளம் காண எங்களை அழைத்தார். மறுநாள் 12.00 மணிக்கு மேல் பாளையங்கோட்டை காவல் நிலையத்திற்க சென்றோம். பாளையங்கோட்டை காவல்

நிலையத்தில் இருந்து அச்சன்புதுரில் காவல் நிலையத்திற்கு தகவல் கூறி அவர்கள் என்னுடைய அம்மாவிற்கு தகவல் கூறினார். நாங்கள் காரில் தான் பாளையங்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்றோம். நாங்கள் சென்ற கார் நம்பரும் காரை ஓட்டிய நபரின் பெயரும் எனக்கு தெரியாது. பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து உடல் இருந்த இடத்திற்கு நாங்கள் காரில் சென்றோம். போலீசார் ஜீப்பில் வந்தார்கள். என் அப்பாவின் உடலை பார்க்கும் போது எறிந்த நிலையில் ஆடையுடன் இருந்தது. ஒருபுறம் முழுவதும் எறிந்திருந்தது வலதுபுறமா இடதுபுறமா என்று எனக்கு தெரியாது. இறந்த உடலின் அருகில் வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தை எழுதிக் கொண்டார்கள். ஆனால் கையெழுத்து வாங்கவில்லை. என்னுடைய சித்தப்பா பெரியப்பா மாமா ஆகியோர்களையும் விசாரித்தார்கள். போலீசார் வாக்குமூலத்தினை பதிவு செய்தனர். 14ம் தேதி பிரேத பரிசோதணை முடித்து உடலை அடக்கம் செய்ய பெற்றுக்கொண்டோம். என்னுடைய அப்பாவின் உடலில் இருதய அறுவை சிகிச்சை செய்த தளும்பும் இரண்டு கால் பெருவிரல்கள் பெரியதாக இருப்பதை வைத்து அடையாளம் காட்டினேன். வேறு எந்த அடையாளத்தையும் நான் பார்க்கவில்லை. உடலை பார்த்த பின்பு அச்சன்புதுர் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது இரவு 9.00 மணிக்கு சாமித்துரையும் அவருடன் வந்த நான்கு நபர்களும் என் தந்தை ராஜகோபாலை கடத்தி சென்றதை நான் பார்த்தாக கூறியிருக்கிறேன். முதல் விசாரணையில் கூறிய விஷயங்கள் பொய் என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.06.16 18:38:28 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

Depositions of Witness for Prosecution Pw9
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஜானகிராமன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of June 2023.

(A1 to A3, A5 present. A4 absent. 317 Cr.p.c. Petiiton filed and allowed)

<u>**முதல் விசாரணை**</u>

நான் அச்சன்புதுரில் குடியிருந்து வருகிறேன். பால் வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன இராஜகோபால் என்னுடைய அண்ணன் ஆவார். என்னுடைய வார்டு உறுப்பினராக இருந்தார். ஆஜர் எதிரிகளை தெரியும். சாமித்துரை பைனான்ஸில் ஒரு கார் எடுத்தியிருக்கிறார். அவர் பைனான்ஸ் கட்டாமல் எங்கள் ஊரில் பஸ் ஸ்டாண்ட அருகில் காரை ஒளித்து வைத்திருந்தார். சாமித்துரை 2 வதாக திருமணம் செய்திருந்தார். அந்த வீட்டில் தான் காரை ஒளித்து வைத்திருந்தார்.

என்னுடைய அண்ணன் தான் பைனான்ஸ்காரர்களிடம் காரை காட்டிக் கொடுத்துவிட்டார் என்று சாமித்துரை நினைத்தார். ஆனால் அது உண்மையல்ல. 12/08/2015ம் தேதி இரவு 9.00 மணிக்கு அந்த காரில் பஸ் ஸ்டாண்ட் அருகில் சாமித்துரையும் 4 பேரும் என்னுடைய அண்ணனை கடத்திச் சென்றுவிட்டார். நான் எனது அண்ணி லட்சுமியை வைத்து அச்சன்புதுர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அதன் பின்பு 13/08/2015ம் தேதி காலை 9.00 மணிக்கு பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் இருந்து அச்சன்புதுர் காவல் நிலையத்திற்கு போன் மூலமாக தகவல் வந்தது. அச்சன்புதுர் காவல் நிலையத்தில் வைத்து எங்களுக்கு தகவல் கொடுத்து நான் என் அண்ணன் மனைவி லட்சுமி மூத்த மகன் தங்கம் என்னுடைய மூத்த அண்ணன் முருகன் அக்காவின் கணவர் செந்தூர்பாண்டி சேர்ந்து உடனடியாக பாளையங்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்றோம். அவர்கள் எங்களை அழைத்து கொண்டு கீழநத்தம் பைபாஸ் அருகே உடல் கிடந்தது. உடல் பாதி எறிந்தும் பாதி எறியாமலும் கிடந்தது. என்னுடைய அண்ணன் இருதயத்தில் அறுவை சிகிச்சை செய்திருந்தார் அந்த தளும்பை வைத்தும் இரண்டு கால் கட்டைவிரல் பெரியதாக இருக்கும் அதை வைத்தும் என்னுடைய அண்ணின் உடல் என்று அடையாளம் காண்பித்தேன். வெள்ளை வேஷ்டியில் மஞ்சள் கரை பார்டருடன் அணிந்திருந்தார். வெள்ளைச் சட்டை வெள்ளை பணியன் புளூ கலர் ஜட்டி அணிந்திருந்தார். சிறிது தூரத்தில் கக்கன் என்கிற ஊரின் பாலத்திற்கு அருகில் என்னுடைய அண்ணனின் தலை கிடந்தது. தாடை பற்கள் கண்ணம் ஆகியவற்றை வைத்து என்னுடைய அண்ணன் தான் என்று அடையாளம் காட்டினோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். 11.30 மணியிலிருந்து 3.00 மணி வரை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

தலையில்லாத உடல் கிடந்த இடத்திற்கும் கக்கன்நகர் பாலத்திற்கும் எவ்வளவு தூரம் என்று எனக்கு தெரியாது. தலையில்லாத உடல் கிடந்த இடமும் தலை மட்டும் கிடந்த இடமும் எந்த இடம் என்று எனக்கு தெரியாது. அந்த முறிக்குளம் என்று யார் சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கூட்டமாக எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு எழுத படிக்கத் தெரியாது. நான் சொன்ன விவரங்களில் போலீசார் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்கு

தெரியாது. போலீசாரின் விசாரணை செய்த போது எறிந்தும் எறியாமலும் இருந்ததால் அது யாருடைய தலை என்று அடையாளம் காண முடியவில்லை என்று கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அண்ணன் இறந்த வழக்கில் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று மேலதிகாரிக்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை. இன்று தான் நீதிமன்றத்தில் என் அண்ணன் இறந்தது சம்பந்தமாக வாக்குமூலம் கொடுக்கிறேன். 12/08/2015 ல் இரவு 9.00 மணிக்கு என் அண்ணன் ராஜகோபாலை சாமித்துரையும் 4 பேர்களும் கடத்தி சென்றதை நான் நேரடியாக பார்த்தேன். போலீசில் புகார் கொடுக்கும் போது கடத்தி சென்றதை நேரில் பார்த்ததாக கூறியிருக்கிறேன். போலீஸ் விசாரணையின் போது எறிந்தும் எறியாத நிலையிலும் என்னுடைய அண்ணனின் தலை இருந்ததாக அடையாளம் காண முடியவில்லை என்று கூறிய பின்பு நீதிமன்றத்தில் அவ்வாறு கூறவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அண்ணை கடத்தி சென்றதை நேரில் பார்த்தேன் போலீஸ் விசாரணையில் கூறாமல் அவ்வாறு நேரில் பார்த்தாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் சம்பவம் விஷயமாக நான் எந்த புகாரும் காவல் நிலையத்தில் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்த உடலில் இருந்ததாக கூறிய இருதய அறுவை சிகிச்சைக்கான தழும்பும் இரண்டு கால் பெருவிரல்கள் பெரியதாக இருப்பதும் சாதாரணமாக பைபாஸ் செய்த நபர்களுக்கு இருக்கும் அடையாளம் என்றால் சரியல்ல. அதனால் அந்த இரண்டு அடையாளங்களை மட்டும் வைத்துக் கொண்டு எறிந்தும் எறியாத நிலையில் இருந்த உடலை நான் அடையாளம் காட்டினேன் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. போலீசார் கைபற்றிய இறந்த உடலும் தலையும் ராஜகோபாலுடையது அல்ல என்றால் சரியல்ல. எதிரகளுக்கு விரோதமாக வேண்டாதவர்களின் தூண்டுதலின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.06.16 18:38:38 +0530